
# நீ!....நீ!... நீ!.. மக்கள் மனத்தில் நீக்கமற நிறைந்தவன் நீ!



நீ மன்னர் இல்லை; மணிமகுடம் தரித்தாய் இல்லை; மாடமாளிகை கூட கோபுரங்களில் அவதரித் தாய் இல்லை; என்றாலும், மனித குலம் போற்றும் மாபெரும் மக்கள் தலைவன்!

தரணி வாழ் மன்னுயிர் போற்றும் தன்னேரிலாத் தமிழ்நாட்டு முதல்வன் நீ!

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார் வடலூர் வள்ளலார்... நீயோ வாடிய உயிர் களை உணர்ந்த போதெல்லாம் வாரி வழங்கும் தயாளு பெற்ற தனயன் ஆனவன்!

பாலைவனம் கண்டு சோர்ந்து படுத்து விடாமல், சோலைவனம் கண்டு சொக்கி சுருண்டு விடாமல் இரண்டையும் ஒன்றாகக் கருதி அரசியல் பயணத்தில் அதிசயம் படைத்த கலைஞர் பிடித்த கைவாள் அல்லவா நீ!

உன்னால் குடிசைகள் கோபுரங்கள் ஆயின;ஆதிக் கபுரிகள் அடிமட்டமாயின! யாவருக்கும் அமுதசுரபித் திட்டங்களால் வாரி வழங்கும் இந்நாள் கோட்டை ஏறிய கொடை வள்ளல் குமணன் நீ!

உனது கை தொட்ட இடமெல்லாம் பொன்னான மாற்றம்; கால் பட்ட இடமெல்லாம் இரு வண்ணக் கொடியின் ஏற்றம்; நீ ஏறிய மேடையெல்லாம் ஒலி பெருக்கியின் சீற்றம்; ஒவ்வொரு நாளும் ஓய்வின்றி உழைப்பதில் உறங்காப் புலி நீ!

தலைமைச் செயலக வருகைப் பதிவேட்டில் நாளும் இடம் பெற்ற இறைவணக்கப் பாடல் நீ! கோட்டை கொத் தளக் கொடி மரங்கள் கும்மியடிச் சிறுமிகளாய் இசைத் திருவிழா காட்சி தரும் காவிரி நாடன் நீ!

நீயன்றோ... எங்கள் இதயத் துடிப்பை விட்டு இடம் பெயராத இனிய இன்னுயிர்த் தலைவன்!

நாடாளும் நலம் காக்கும் நானிலங் கண்ட நல்லி சைப் புதல்வன் நீ!

கலைஞருக்குப் பிறகு அதிகார வர்க்கங்கள் அரசிய லில் அலசிய நேரத்தில், யார் கழகத் தலைவன் என ஒப்பாரிப்பாட்டு வைத்து விமர்சனம் செய்தன!

பார்வேந்தர் – தார்வேந்தர் – பூவேந்தர் – மூவேந்தர் என மகத்துவம் படைத்த மன்னர் குலந்தோன்றினாயில்லை நீ. குவலயம் காக்க சாமான் யனின் கோபாலபுரக் குடிலில் தோன்றிய கொள்கை மறவன் நீ!

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என முழங்கி நிற்கும் ஆரியப்படை கடந்த அடலேறாம் நெடுஞ்செழியப் பாண்டிய வளவன் நீ!

நாத்திக இரதம் ஏறி இராஜபாட்டையில் வலம் வந்த ஈரோட்டுக் கிழவனின் புகழ் இசைக்கும் இராஜாளிப் பறவை நீ!

'என் வழி தனி வழி' எனத் தள்ளாடும் வயதிலும், தண்டூன்றிப் பட்டி,தொட்டிகள் எல்லாம் பகுத்தறிவுப் பயணம் செய்த வைக்கம் வீரரின் உயில்பதிவு நீ!

உடல் நோக, நோகச்... சமூக நீதிஊன் செங்குருதி கொட்டித் தமிழ் மண்ணில் தோய, தோய... நெடும் பய ணப் பரப்புரை செய்தவரின் வாரிசு நீ!

மாநில சுயாட்சிக் கோட்பாட்டைக் கோட்டை கொடு முடியில் கொடியேற்றிக் குரல் கொடுத்து நின்ற திருக்கு வளைக் கருவறை வெளிவந்த கழகப் புலிப் போத்து நீ!

மதவாத மிலேச்சர்களால் களவாட முடியாதது; மத யானைகளால் சிதைக்க முடியாதது ஈரோட்டுக் கருவூ லம்...



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

உன்னால் தான் பூட்டவும், திறக்கவும் முடியும்! அதற்கான உயில் ஆவணம் எழுதிக் கலைஞர் வழங் கிச் சென்ற காவல் கடையாணித் திறவுகோல் நீ!

சமூக நீதிக்கு எதிராகச் சுழன்று, சுழன்று வீசிய ஆத் திகப் புயலைப் புறங் காணச் செய்த ஈரோட்டு இமய இலட்சியப் பூஞ்செடி நீ!

நாத்திக அப்பராய், சுந்தரராய், ஞானசம்பந்தராய், சேக்கிழாராய், கம்பராய் தமிழக வீதிச் செவிகள் பழுக் கவும், மக்கள் மனம் இனிக்கவும் கொள்கைப் பரப்புரை செய்த காஞ்சித் தலைவனாம் பேரறிஞரின் வழித் தோன்றல் நீ!

ஒரு போராளியின் பூ மனமும், புதையல் பூத்த போர்க் குணமும் கொண்ட நவராத்திரி நீ!

சனாதனக் குப்பைகள் சாம்பல் மேடாகப் பேனாவா லும், நாவாலும் கூர் ஈட்டிப் பாய்ச்சல், போர் சம்மட்டி தாக்குதல்களால் கல்லறைகள் எழுப்பிய கர்த்தாவின் கரிகாலன் நீ!

'பகுத்தறிவுக் கொள்கை ஒன்றே எனது பயணச் செலவு' என மாணவப் பருவம் முதலாய்க் கானக் குயி லாய்ப் புறப்பாட்டு பாடியவரும், தமிழ்த் தாய்க்குச் சாதனை பல படைத்தவருமான பண்பாட்டுப் புலவராம் கலைஞரின் தவப் புதல்வன் நீ!

கல்வி, மருத்துவம், ஆலைகள், சாலைகள், பாலங் கள் என மக்கள் நோக்கம் நிறைவேற தேக்கமின்றிச் சிறப்பு செய்துவரும் மக்கள் புரவலன் நீ! உலகப் பிரப லமும் நீ!

ஏழையர் நிலை கண்டு, எளியவனாய் மனம் இறங் குபவன். அன்பு வழியும் காருண்யக் கைகள் ஏந்தி வாரி அணைக்கும் அழைப்பில் பாரம் சுமக்கும் இயே சுவின் மனம் படைத்த திராவிட ஏந்தல் நீ!

பரந்து விரிந்த செம்பரிதி சுமந்த இந்த வையகத்தில்; பறந்து, பறந்து உழைப்பதில் இறக்கை கட்டி வான் பறக் கும் இயந்திர தலைவன் நீ!

உன்னை நேசிப்பவர், பூசிப்பவர் மட்டுமல்ல; உன்னை வாசிப்பவர் தூஷிப்பவர் எதிரிகள் எல்லார் இதயத்திலும் நிரந்தர இருக்கை போட்டு நீக்கமற நிறைந்து விட்ட மந்திர தலைவனும் நீ!

சட்டமன்றத்தை மக்கள் மன்றமாக மாற்றிக் காட்டிச் சாதனைகள் படைத்து வருவதால் நீ அண்ணா, கலை ஞரின் மறு உருவம் எடுத்த மாபெரும் புரட்சியாளன்!

ஆட்சிக் கட்டில் ஆளுமையர்க்கே என எழுதாமல்; மக்களால்– மக்களுக்காக– மக்களுடையது என மக்க ளுக்கான 'அரசியல் அரிச்சுவடியை எழுதிவரும் இமா லயத் தலைவன் நீ!

அண்ணா வழியில் அறநெறி பிறழா அடிச்சுவடு பதிக்கும் ஆழிசூழ் தமிழ் உலகத் தலைவன் நீ!

காயப்பட்டவர் வாழ்வில் காயகல்ப மருந்தாக இருந் தவர் ஆரூரார்; அவரின் கனிவான இதயத்தைப் பெற்ற காவியத் தலைவன் வரைந்த ஓவியம் நீ!

பள்ளிப் பிள்ளைகள் வயிற்றுப் பசி போக்கும் வற் றாச் சிரப்புஞ்சித் தாயுமான அமுத சுரபி நீ!

கருவறை முதல் கல்லறை வரை தூக்கிச் சுமக்கும் பெண்கள் குலப் பல்லக்கு ஆனவராய் வாழும் ஞானத் தலைவன் நீ!

நடைபிண வாழ்வில் நலிந்த, மெலிந்த ஊனமுற்ற முடவர்களுக்கும் உதவுவதில் கழகக் கர்ணனும் நீ! கடைசித் தொண்டனான குசேலர் கண்ட கார்மேக வர் ணனும் நீ!

அனாதையர் அனைவருக்குமான ஆதரவு கரம் நீட்டி அள்ளித் தூக்கி அரவணைக்கும் அரசியலன்னை தெரசாவும் நீ!

எட்டுத் திசைகள் தோறும் பூபாள மெட்டு அமைத்துப் பூரிக்கச் செய்பவன் நீ!

தீண்டும் திட்டமெல்லாம் தென்புலக் காவல் காக்கும் முடிவேந்தர் வழிவந்த கழகத் தெய்வம் நீ! தீதிலா மன் பதை வாழ்த்தும் வான் மழையாய், தித்திக்கும் தேன் சுரப்பாய் விளங்கும் ஞானகங்கை நீ!

தொடங்கும் தொழில்கள் யாவும் மண்தாவும் மானாய், மழை நீர் துள்ளும் மீனாய், மலை முகட்டு தேனாய் மேவும் தொலைநோக்குச் சாதனையால் 'எவ ரெஸ்ட்' ஆகி நிற்பவன் நீ!

வான் விரித்த நீல வண்ண ஓவியச் சோலை மெத் தையில் வித்தை காட்டும் நட்சத்திர அரசியல் புதிர் நீ!

தொழிலாளர் வாழ்வில் ஒளிவிட்டுத் திகழ்கின்ற தமி ழகத்தின் விடிவெள்ளி நீ! கழகம் கண்ட காரல் மார்க் ஸின் மூலதன நனவும் நீ!

சான்றோர், ஆன்றோர், கற்றவர், மற்றவர்க்கும் பெருமை தீட்டும் கலாசாலை நீ!

கைவிடப்பட்ட கட்டுமரங்களைக் கைநீட்டிக் கரை சேர்த்துக் காதல் கொள்ளும் கலங்கரை விளக்கம் நீ!

தேர்தல் காலச் சூறாவளிகளால் கவிழ்ந்து போகும் காகிதக் கப்பல் அல்ல நீ! வளைந்தும், நெளிந்தும், ஆடி, முன்னும், பின்னும், குனிந்தும், விழுந்தும், நிமிர்ந்தும் நிற்கும் அரசியல் நாணல்புல் நீ!

மயக்கு மொழி தோகை விரிக்கும் மந்தி இந்தியை விரட்டி, மதுரத் தமிழ் மொழி, இனம் காக்கும் திராவிட வேங்கை நீ!

ஒன்றிய ஆள வந்தார்களால் இந்திய அரசியல மைப்புச் சட்டத்திற்கு ஆபத்து வரும் போதெல்லாம், குரல் கொடுத்துப் பாதுகாக்கும் அறிவாலயச் சூரியன் நீ!

நீ எடுத்தவன் கை கிடைத்துக் கிறுக்கும் பேனா அல்ல; சாதனைச் சகாப்தம் உருவாக்கும் எழுத்தாளன் பிடித்த இரவிவர்மா தூரிகை!


நீ மளிகைக் கடைப் பொட்டலக் காகிதம் அல்ல; சரக்கு தீர்ந்தால் கசக்கி மடித்துத் தூக்கி வீச.... நீ உயிர் வாழும் உயில் உறுதிப் பத்திரம்!

நீ கை குலுக்கினால் அது கூட்டணி! நீ குரல் கொடுக் கத் தொடங்கினால் அதுவே ஓட்டணி! நீ வலம் வந்தால் கோட்டையில் ஏறும் அதுதான் வெற்றி அணி! எதிர் களோ வீழ்ந்து போகும் வெற்று அணி!

வண்ணப் பலூன்கள் வாக்காளர்களுக்குக் கண் சிமிட்டி அரசியல் வானில் வாலாட்டுகின்றன.... நீயோ குண்டூசி! பலூன்கள் தான் பயப்பட வேண்டும்!

நீ வெறும் அரிதாரம் பூசி வந்த நாற்காலித் தலை வன் அல்ல; நடமாடும் உயிர்த்தலைகளின் வாழ்வா தாரம் எழுத எடுத்த அவதாரத் தலைவன்!

"இவரைப் போல் யார் உண்டு?" என ஒப்புவமை, உயர்வு கூறவியலாத– ஈடு, இணையில்லாத் தலை வன் நீ!



சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயநகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் ஆ.ராசா எம்.பி. கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி மற்றும் மாநில,மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி பார்வையாளர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன் பிறப்புக்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதலமைச்சர் பேருரை ! துணை முதலமைச்சர் சிறப்புரை!

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் LOADING 2.0! நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் சந்திப்பு!

### முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் சென்னையில் நாளை பிரம்மாண்ட விழா!

சென்னை,பிப்.19-

திமுக தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் சந்திப்பு பிப்ரவரி 20 வெள் ளிக்கிழமை மாலை 3 மணி அளவில் சென்னை நந்த னம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் பிரம்மாண்டமாக நடை பெற உள்ளது.

LOADING 2.0 என்ற பெய ரில் நடைபெறும் இந்த சந் திப்பு விழாவிற்கு தகவல் தொழில்நுட்ப அணி செய லாளர் அமைச்சர் முனை வர் டிஆர்பி ராஜா தலைமை வகிக்கிறார்.

கழகத் தலைவர் மாண் புமிகு முதலமைச்சர் அவர் கள் விழா பேருரை ஆற்றி, தேர்தல் களத்தில் தகவல் தொழில்நுட்ப அணியின ரும் தன்னார்வலர்களும் முனைப்புடன் செயல்படு வதற்கான ஆலோசனை களை வழங்க இருக்கிறார். இந்நிகழ்வில் துணை முத லமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை ஆற் றுகிறார்.

தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலா ளர் டாக்டர் ஆர் மகேந்தி ரன் வரவேற்புரை ஆற்ற, களத்திலும் தளத்திலும் LOADING 2.0 என்ற தலைப் பில் தன்னார்வலர்கள் மற் றும் நிர்வாகிகளின் கலந்து ரையாடல், தொடரும் திராவிட மாடல் என்ற தலைப்பில் ஊடகவியலா ளர் செந்தில் வேல், திராவி டர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி, திமுக செய்தி தொடர்பு துணைச் செய லாளர்கள் சூர்யா கிருஷ் ணமூர்த்தி, டாக்டர் அபி சுல்லா ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

செயலி அறிமுகம் உள் ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

தகவல் தொழில்நுட்ப அணி சென்னை தெற்கு மாவட்ட ஒருங்கிணைப் பாளர் மணிகண்டன் நாடி முத்து நன்றியுரை ஆற்றுகி றார்.

### என்.சந்திரன் எம்.சி. தலைமை! ப.குணாளன் வரவேற்புரை!

## ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரைக் கூட்டம்!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் – கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி. சிறப்புரை!

சென்னை, பிப்.19-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் சட் டமன்றத் தொகுதியில் திராவிட மாடல் நல்லாட் சியின் 5-ஆண்டு சாதனை கள் விளக்கம் மற்றும் தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை மாபெ ரும் பொதுக்கூட்டம் ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக்கு ழுத் தலைவர் என்.சந்தி ரன் தலைமையில் ஆலந் தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ப.குணாளன் வரவேற்புரையில் இன்று 19.2.2026 வியாழக்கிழமை மாலை 4.00 மணி 48வது தெரு நங்கநல்லூர், (கே. வி.பி.பேங்க் அருகில்). நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கண் டோண்மென்ட் நகர செயலாளர் டி.பாபு, குன் றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாத ரம், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி. கே.விவேகானந்தன்[எ] ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்டச் செய லாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன், கனி மொழி என்.வி.என். சோமு எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இதில் டி.ஆர்.பாலு எம். பி., கழக அமைப்புச் செய லாளர் ஆர்.எஸ்.பாரதி

மீ.அ.வைதியலிங்கம், பி.டி.சி. ஜி.செல்வராஜ், பத்மபிரியா, எம்.எஸ். கே.இப்ராகிம், ஆர்.டி. பூபாலன், இரா.பாஸ்க ரன், கீதா ஆனந்தன், கே. எத்திராஜ், கோல்டு டி.பிர காஷ், B.சாய் ஜெய்காந்த், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த் தாண்டன், கே.ஆர்.ஆனந் தன், ஜி.சுந்தர்ராஜன், ஆர். பாபு, ஏ.சாலமோன்MC, கே.ராஜேஸ்வரிசத்யா, இ.ரமேஷ்,வே.டில்லிபாபு, கோ.கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், எஸ். ஜெயா, எம்.சையத் அபுதா கீர், டி.ஜேசுதாஸ், ஜெ.நட ராஜன், இ.உலகநாதன், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், ஏ.ஆர்.சர வணா, ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, ம.கோ.கருணா நிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன் உள் ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

நன்றியுரை பகுதி இளைஞர் அணி அமைப் பாளர் விக்னேஷ் மணி கண்டன்.

## திருப்பூர் தெற்கு மாவட்டம்

### குடிமங்கலம் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ச.கிரி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திருமதி. கவிதா கிரி (6/38, இராமசந்திராபுரம் & அஞ்சல், உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம் – 642 120) அவர்கள் குடிமங்கலம் வடக்கு ஒன்றியக்கழகப்பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திருப்பூர் தெற்கு மாவட்டப்

### பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

கடந்த 4.11.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக கே.ஈஸ்வரசாமி, எம்.பி., அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட பணிகள் செவ்வனே நடைபெற, பின்வரும் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள்: 1.இரா. ஜெயராமகிருஷ்ணன், துங்காவி, மடத்துக்குளம். 2. கே.எம்.முபாரக்அலி, காரத்தொழுவு, மடத்துக்குளம். 3. எம்.முருகானந்தம், விளாமரத்துப்பட்டி, உடுமலைப் பேட்டை. 4. இ.ராதிகா, பூலாங்கினார், உடுமலைப்பேட்டை. 5. டி. சக்திவேல், சிஞ்சுவாடி, பொள்ளாச்சி.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

"விருதுநகர் வடக்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.வி.கந்தசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்,

விருதுநகர் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 (வெள்ளிக் கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் விருதுநகர் வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.